**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.624/2018**

**Prosecution Witness : 3**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : **தினேஷ் குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : **வீரமணி** | **Calling** | : | **சொந்த தொழில்** |
| **Village** | : **புஷ்பம்மாள் நகர்** | **Religion** | : | |
| **Taluk** | : **திண்டுக்கல்** | **Age** | : | **40** |
| | | **Dated** | : | **30.06.2025** |

**30.06.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–5 **திரு.** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.3** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2ம் எதிரிகள் ஆஜர் இல்லை.U/s.355 of BNSS petition filed and allowed . 3 ம் எதிரி இறப்பின் காரணமாக அவர் மீதுள்ள குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது**

**<u>முதல் விசாரணை</u>**

நான் திண்டுக்கல் புஷ்பம்மாள் நகரில் குடியிருந்து சொந்த தொழில் செய்து வருகிறேன்.எழிழரசன் எனது தம்பி . கடந்த 19.09.2018ம் தேதி காலை எனது தம்பி எழிழரசன் எனக்கு போன் செய்து அவரது அப்பா ஆனந்த குமார் உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் உடனடியாக வீட்டிற்கு வருமாறும் அழைத்தார்.நான் உடனடியாக சென்று பார்த்தேன்.எனது சித்தப்பா ஆனந்த குமார் தலையில் ரத்தக்காயத்துடன் பதற்றமாக வாய்க் குளறி பேச முடியாத நிலையில் இருந்தார். அவரை பேட்டா ஷோரூம் அருகே மூன்று நபர்கள் கல்லால் அடித்து செல்போன், நகை மற்றும் பணத்தை பறித்து சென்று விட்டதாக சொன்னார். நாங்கள் உடனடியாக அவரை மருத்துவமனைக்கு

சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக ஷிபா மருத்துவமனையில் அனுமதித்தோம். எனது சித்தப்பா ஆனந்த குமாரை அடித்ததால் அங்கேயே மயக்கமான நிலையில் கிடந்தார். அங்கிருந்த இரவு Watch man எனது சித்தப்பாவை அழைத்து வந்து வீட்டில் விட்டுள்ளார்கள்.அவர்களுக்கும் யார் அடித்தது என்று விவரம் தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்மந்தமாக நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அசா.1 எனது தம்பி என்பதாலும், அசா.2 எனது சித்தப்பா என்பதாலும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. )**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.07.01 09:55:02 +0530

Judicial Magistrate No.II
Dindigul.